
உ

சிவமயம்



அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைச் சேர்ந்த

## அமரர்

## கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

(ஓய்வுநிலை ஆசிரியர்.)

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# "பிள்ளையார் கதை"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



அச்சுவேலி தெற்கு அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொண்ட

# அமரர் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

(இளைப்பாறிய நிலை ஆசிரியர்)

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# "பிள்ளையார் கதை"

11.04.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அச்சுவேலிப் பதியில் ஆட்சி கொண்டமரும்

உலவிக்குள விநாயகப் பெருமானை

உள்ளன்போடு வாழ்நாள் முழுவதும்

வாழ்த்தி வணங்கி வான் கதியடைந்த

சைவப் பேராளர்

கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

அவர்களின் ஞாபகார்த்தமாக

இம்மலரை அவரின் பொற் பாதங்களில்

சமர்ப்பிக்கின்றோம்



குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



பிறப்பு
30.06.1935

இறப்பு
12.03.2017

# அமரர்
# கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

## திதி வெண்பா

ஆண்டதுவாம் துர்முகியில் மாசி மாதத்தில்
பூண்டதோர் பூரணையாம் திதியில் – நீண்ட புகழ்
நன் விநாயகமூர்த்தியாம் நல்ல பண்பாளன்
சென்றிட்டார் தெய்வமலர்தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# தோத்திரப் பாடல்கள்

## விநாயகர் வணக்கம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதிவர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.

## தேவாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ
னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு நல்ல நல்ல வவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

## திருவாசகம்

பால் நினைந்தூட்டும் தாயினுஞ்சாலப்
பரிந்து நீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம் புறந் திரிந்த
செல்வமே சிவ பெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே யுலப்பிலா வொன்றே
உணர்வு சூழ் கடந்ததோர் ருணர்வே
தெளிவளர் பளிங்கின் றிரண் மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்குந் தேனே
அளிவள ருள்ளத் தாநந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டி யழுதிடப்
பாற்கட லீந்த பிரான்
மாலுக்குச் சக்கர மன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்
பலமே யிடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல் லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெ லாமுணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவான்.

## திருப்புகழ்

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனொடு ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள் வினை தீர்த்தமுக மொன்றே
குன்றுருக வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரனைவ தைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மான பொருள் நீயருள வேண்டும்
ஆதியரு ணாசல மமர்ந்த பெரு மானே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க
மன்னன்கோன்முறை அரசு செய்க குறைவிலா
துயிர்கள்வாழ்கநான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி
மல்கமேன்மைகொள் சைவநீதி விளங்குக ஊலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# விநாயகர் வழிபாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே
- திருமூலர் -

பவளமால் வரையில் நிலவெறிப் பதுபோல்
பரந்தநீற் றழகுபச் சுடம்பில்
திவளமா துடன்நின்று ஆடிய பரமன்
சிறுவனைப் பாரதப் பெரும்போர்
தவளமா மருப்பொன்று ஒடித்தொரு
கரத்தில் தரித்துயர் கிரிப்புறத் தெழுதும்
கவளமா களிற்றின் திருமுகம் படைத்த
கடவுளை நினைந்துகை தொழுவாம்.
- திருவாதவூர்ப்புராணம் -

ஒருகோட்டன் இருசெவியன் மும் மதத்தான்
நால்வாய் ஐங்கரங்கள் ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ்சடையான்
தருமொரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும்வணங்கி ஓவாதே
இரவுபகல் உணர்வார் சிந்தைத்
திருகோட்டி அயன்நெடுமால் செல்வமும்
ஒன்றோவென்னச் செய்யும் தேவே
- திருவாதவூர்ப்புராணம் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திங்களங் கொழுந்து வேய்ந்த செஞ்சடைக்
கொழுந்தே போற்றி
மங்கைவல் லபைக்கு வாய்ந்த மணவறின்
மலர்த்தாள் போற்றி
ஐங்கரநால்வாய் முக்கண் அருட்சிவக்
களிறே போற்றி
கங்கையாள் மகிழும் செல்வக் கணேசாநின்
கழல்கள் போற்றி

பண்ணியம் ஏந்துங் கரந்தனக் காக்கி
பானிலா மருப்பமர் திருக்கை
விண்ணவர்க் காக்கி அரதனக் கலசமேந்தும்
வியன்கரம் தந்தைதாய்க் காக்கி
கண்ணிலா ஆணவ வெங்கரி பிடித்தடக்கிடும்
இருகரம் கரிசனோர்க் கருளும்
அண்ணலை திருத்தணிகைவளர் ஆபத்சகாயனை
அகந்தழீஇக் களிப்பாம்.

உள்ளமெனுங் கூடத்தில் ஊக்கம் என்னுந்
தறிநிறுவி உறுதியாகத்
தள்ளரிய அன்பென்னுந் தொடர்பூட்டி
யிடைப்படுத்தித் தறுகட்பாசக்
கள்ளவினைப் பசுபோதக் கவளமிடக்
களித்துண்டு கருணையென்னும்
வெள்ளமதம் பொழிசித்தி வேழத்தை நினைந்துவரு
வினைகள் தீர்ப்பாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் யானை முகத்தானைக்
காதலாற் கூப்புவர் தம்கை

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து

வானுலகும் மண்ணுலகும் வாழ மறை வாழப்
பான்மைதரு செய்யதமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுகனைப் பரவி அஞ்சலி செய்கிற்பாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

சிவமயம்

# பிள்ளையார் கதை

## காப்பு

கரும்பு மிளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் மவல்பலவும் மேன்மே-லருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்க டீர்க்குங்
கணபதியே யிக்கதைக்குக் காப்பு

திருவிளங்கு மான்மருகா சேவதனி லேறி
வருமரன்றா னீன்றருளு மைந்தா-முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா வுனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூடுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கு - முருவாக்கும்
ஆதாலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றை மருப்பு மோரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும்- பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத்
தன்மனதிலெப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று
பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலுங் கலந்துனக்கு நான் தருவேன் - கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா

## சப்பாணி

எள்ளுப் பொரிதே னவலப்ப மிக்கும் பயறு மிளநீரும் வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப் பழமும் வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில் கொள்ளைக் கருணைக் கண பதியே கொட்டி யருள்க சப்பாணி

சண்டப் பெருச்சா ளியேறிச் சடைகொண்டுவையத் துலாவி, அண்டத் தமரர் துதிக்க வடியார்க் கருளும் பிரானே, எண்டிக்கு மன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக் குண்டைக் கணபதி நம்பி கொடுங் கையாற் சப்பாணி கொட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சரஸ்வதி துதி

புத்தகத்துள்ளுறை மாதே
பூவிலமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய்
வேதப்பொருளுக் கிறைவீ
முத்தின் குடையுடை யாளே
மூவுலகுந்தொழு தேத்துஞ்
செப்புக் கவித்த முலையாய்
செவ்வரியோடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய்
சரஸ்வதி யெனுந் திருவே
எக்கால முமுனைத் தொழுவே
னியலிசை நாடகமென்னும்
முத்தமிழ் கல்விக ளெல்லா
முழுது மெனக்கருள் செய்தென்
சித்தந் தனில்நீ யிருந்து
திருவருள் செய்திடுவாயே!

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை யிருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையாற் றெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்தர கிரியில் வடபாலா ங்கோர்
இந்துதவழ் சோலை யிராசமா நகரியில்
அந்தண னொருவனு மாயிளை யொருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுளா லயமுங் கடிமலர்ப் பொய்கையுந்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பர சீன்ற
மதர்விழி பாகனை வழிபடு நாளின்
மற்றவர் புரியு மாதவங் கண்டு
சிற்றிடை யுமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்குயிரே
அரனே மறையவர்க் கருள்புரிந் தருளென
அந்தவந் தணனுக் கிந்தநற் பிறப்பின்
மைந்தரில் லையென்று மறுத்தர னுரைப்ப
எப்பரி சாயினு மெம்பொருட் டொருசுதன்
தப்பிலா மறையோன் றனக்கருள் செய்கென
எமையா ளுடைய யுமையாண் மொழிய
இமையா முக்க ணிறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை யென்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை யவளும் மனந்தளர் வுற்றுப்
பொன்றிடு மானிடப் புன் பிறப் பெய்துதல்.
நன்றல வென்றே நடுக்கமுற் றுரைப்பக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறைமிடற் றண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுத லவற்குநீ பிள்ளையாகச்
சென்றவண் வளர்ந்து சில பகற் கழிந்தால்
மன்றல் செய் தருள்வோம் வருந்தலை யென்று
விடைகொடுத்தருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்
தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற் றுதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற வியல்பின ளாகி
ஐயாண் டடைந்தபி னன்னையு மத்தனும்
மையார் கருங்குழல் வாணுத றன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கானமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பிறப் பில்லாப் பெரியோற் கன்றி
அறத்தகு வதுவைக் கமையேன் யானென
மற்றவன் றன்னையுன் மணமக னாகப்
பெற்றிட வரிதெனக் பெயர்ந்தவர் பேச
அருந்தவ முயற்சியா லணுகுவே னியானெனக்
கருந்தட நெடுங்கட் கவுரியங் குரைப்ப
மருமலி கமல மலர்த்தடத் தருகிற்
றருமலி நிற்றவச் சாலைய தமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழலுமை யருந்தவம் புரிதலும்
அரிவைத னருந்தவ மறிவோம் யாமென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவரு மறியா விமையவர் பெருமான்
மானிட மேந்தும் வண்ணம தொழிந்து
மானிட யோக மறையவ னாகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயி றவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டி
கண்ணறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவமிங் கியற்றுவ தென்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடவென் றுரைத்தலும்
நன்றெனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினி லேறி மான்மழுத் தரித்துக்
காட்டிநிற் சுடலையிற் கணத்துட னாடிப்
பாம்பு மெலும்பும் பஃறலை மாலையுஞ்
சாம்பரு மணிந்து தலையோ டேந்திப்
பிச்சைகொண்டுழலும் பித்தன் றன்னை
நச்சிநீ செய்தவ நகைதரு முனக்கெனப்
பூங்கொடி யருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கவ ணாணமுற் றணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுத லொழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாணுதற் சேடியர் சிலர் போய்த்
தந்தைதா யிருவர் தாளிணை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாவைதன் செங்கையைப் பற்றின னென்றலுந்
தோடலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத் தணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கைய ரோடி
நீடிய புகழாய் நீயெழுந் தருளென
மைமலமர்க் குழலி வந்தெனை யழைக்கில்
அம்மனை புகுவனென் றந்தண னுரைத்தலும்
பொற்றொடி நீபோய்ப் பொய்கையி னின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை யிகழ்ந்த சிற்றறி வுடையோன்
அவனையான் சென்றிங் கழைத்திடே னென்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுக னோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக் கல்லதென்
பொற்பமர் கொங்கை பொருந்துதற் கரிதால்
மானிட வேட மறையவன் றனக்கு
யான்வெளிப் படுவ தில்லையென் றிசைப்ப
மலையிடை வந்த மாமுனி தன்னை
இணையடி தொழுத லிளையோர்க் கியல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுத லொழிந்து
தாய்சொன் மறுத்தல் பாவமென் றஞ்சி
ஆயிழை தானு மவனெதிர் சென்று
சுற்றிவந் தவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் றன்னை மனையிற் கொணர்ந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதியம் பகவற் கன்ப னாகும்
வேதியன் பழைய விருத்தெத்னென் றெண்ணி
ஆசன நல்கி யருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி யழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் றன்னை அமுதுசெய் வித்துச்
சந்தனங் குங்குமஞ் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தோடு சாதிக்காயும்
கர்ப்பூ ரத்தோடு கவின் பெறக் கொண்டு
வெள்ளிலை யடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தடடி லுகந்துமுன் வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமறை முனிதனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுக நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியி னயனமு நீல கண்டமும்
மானு மழுவு மலர்க்கரத் திலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் னுருவங் காட்டிமு னிற்ப
மரகத மேனி மலைமக டானும்
விரைவொடங் கவனடி வீழ்ந்திறைஞ் சினளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிய யனிந்திர னமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவ ரவுணரி ராக்கதர்
பூத ரியக்கர்கிம் புருட ரலகை
சித்தர்தா ரகைகந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்திலுள் ளவரும்
மணிக்கரும் களத்தனை வந்தடைந் ததற்பின்
மன்றலங் குழலிக்கு வதுவைநாட் குறித்துத்
தென்றல் வந் திலங்கு முன்றி லகத்துப்
பொன்றிகழ் பவளப் பொற்கா னாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி
ஆணிப்பொற் றகட்டா லழுகுற வேய்ந்து
நித்தில மாலை நிரை நிரை தூக்கிப்
பத்திக டோறும் பலமணி பதித்துத்
தோரண நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக் கேற்றிப்
பத்திப் படர்முனைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுகுங் கதலியு நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமக டன்னைத்
திருமணக் கோலஞ் செய்தன ராங்கே
எம்பி ரானையு மிளங்கொடி தன்னையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம்ப ரெல்லா மொருங்குடன் கூடித்
கடலென விளங்கக் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந் தேத்த மகிழ்ந்துட னிருத்திப்
பறையொலி யோடு பணிவளை யார்ப்ப
வதுவைக் கேற்ற மறைவிதி நெறியே
சதுர்முக னோமச் சடங்குக ளியற்றத்
தறுகலற் றொளிபொற்றாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைந் சிவன் கை பிடித்த பின்
அரிவளஞ்சூழ வெரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதணி கருங்குழற் பூவைதன் னுடனே
ஓத நீர் வேலைசூ ழுஞ்சயம் பதிபுக
ஏரார் வழியி னெண்டிசை தன்னைப்
பாரா தேவா பணிமொழி நீயென
வருங்கருங் குழலாண் மற்றுமுண் டோமெனத்
திருந்திழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்துவிளை யாடல்கண்
டொளிர்மணிப் பூணா ளுரவோ னுடனே
இவ்வகை யாய்விளை பாடுவோ மீங்கென
அவ்வகை யரனு மதற்குடன் பட்டு
மதகரி யுரித்தோன் மதகரி யாக
மதர்விழி யுமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியிற் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தணர் சிறக்க வானினம் பெருகச்
செந்தழல் வேள்விவே தாகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல வரசர்செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோ
டைங்கர தலமு மலர்பத மிரண்டும்
பவளத் தொளிசேர் பைந்துவர் வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப் மிரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோ லகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியி னயனமு முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போற் றழைமடிச் செவியுமாய்
ஐங்கரத் தண்ணல் வந்தவ தரித்தலும்
பொங்கர வணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துட னோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்
மண்ணுளோர்களும் வந்துனை வணங்க
ஆங்கவர் தங்கட் கருள்சுரந் தருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி யளித்துப்
பாரண மாகப் பலகனி யருந்தி
ஏரணி யாலின்கீ ழினிதிரு வென்று
பூதலந் தன்னிற் புதல்வனையிருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெய்வ நாயகன் சிறந்தினி திருந்த பின்
வானவராலும் மானுட ராலுங்
கானமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலு முயிரழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத் தடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத் தவுணன்
பொன்னுல கழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை யிடுக்கண் படுத்திக்
கொடுந் தொழில் புரியுங் கொடுமைகண் டேங்கி
அடுந்தொழிற் குலிசத் தண்ணலு மமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புர மெரித்தோன்
அஞ்சலீ ரென்றவர்க் கபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத் தண்ணலை நோக்கி
ஆனை மாமுகத் தவுணனோ டவன்றன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்று போல் வளர்ந்த குறப்படை கூட்டி
வென்றுவா வென்று விடை கொடுத் தருள
ஆங்கவன் றன்னோ டமர்பல வுடற்றிப்
பாங்குறு மவன்படை பற்றறக் கொன்ற பின்
தேர்மிசை யேறி சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைவெண் மருப்பை யொடித்தவனுரத்திற்
குற்றிட வெறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென வெழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்தவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகன மாக்கி
எந்தை விநாயக னேறின னிப்பால்
எறிந்தவெண் மருப்பங் கிமைநொடி யளவிற்
செறிந்தது மற்றவன் றிருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்தருளும்
வல்லவை தனைத்தன் மனையென மணந்தே
ஓகையோ டெழுந்தாங் குயர்புடை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிக் கயல்கமு கேறுந்
திருச்செங் காட்டிற் சிவனையர்ச் சித்துக்
கணபதீச் சரமெனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குண் டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந் தன்புட னெய்திய பின்னர்க்
கணங்களுக் கரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற் றிருந்திட வாங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்தில னேவல்செய் திடுநாள்
அதிகமா யுரைக்கு மாவணித் திங்களின்
மதிவளர் பக்கம்வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென் றெண்ணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட் டெண்ணிய பெறுநாள்
ஒப்பரும் விரதத் துறுமொரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்கா தாற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவரைங் கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமர னிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழ தடியிணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக் கதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமுந்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டன னகைத்தான் கரிமுகக் கடவுளுங்
கொண்டனன் சீற்றங் ஞுகுபேரனை நோக்கி
என்னைக்கண்டிங் கிகழ்ந்தனை சிரித்தாய்
உண்னைக் கண்டவ ருரைக்குமித் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவுமெய் துவரென் றசனிபோற் சபித்தான்
விண்ணவ ரெல்லா மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுளித் தினத்திற்
கோரவஞ் சினமிக கொண்டன னந்நாண்
மார்கழித் திங்கண் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்
றிதயத் தெண்ணி யாவரு நோற்றார்
இப்புவி மாந்த ரியம்பிய விரதம்
வைப்புட னோற்ற வகையினிச் சொல்வாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனு மிளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் றிருமுக நோக்கி
எண்ணிய விரத மிடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்புண் டாகவுஞ்
செருவினி லெதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயகத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வ மெவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக் குரையெனப்
பாட்டாளி துதையும் பசுந்துளாய் மார்பனுங்
கேட்டருள் வீரெனக் கிளர்த்துக லுற்றான்
அக்கு நீ றணியு மரன்முத லளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் னொத்தொளி விளங்குங்
கோடிசூ ரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையிற் றந்தமு மொருகையிற் பாசமும்
ஒருகையின் மோதக மொருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோ னுறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றிமை யவரும் யாவரும் துதிப்ப
நன்றித ருத்திரு நாமம் படைத்தோன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரவலர்க் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போது
வித்தியா ரம்பம் விரும்பிடும் போது
உத்தியோ கங்க ளுஞற்றிடும் போதும்
ஆங்கவன் றன்னை யருச்சனை புரிந்தால்
தீக்குறா தெல்லாஞ் செயமுண் டாகும்
கரதல மைந்துடைக் கணபதிக்குரிய
விரதமொன் றுளதை விரும்பிநோற் றவர்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத் துண்டாம்
புந்தியி னினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வெற்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டுக்
நுவலரும் விரத நோற்றிடு மியல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய் விதமும்
விரிந்தெமக் குரைத்திட வேண்டுமென் றிரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுந்துரை செய்வான்
தேருநீ ராவணித் திங்களின் மதிவளர்
பூருவ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறா தியற்றி
அத்தின மதனி லைங்கரக் கடவுளைப்
பத்தியோ டர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்குமங் கவன்றன்
ஒள்ளிய வருட்டிரு வுருண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியொர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிலர் மண்ணா லமைத்தலுந் தகுமால்
பூசை செய் திடுமிடம் புனிதம தாக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத் திருத்தி
விந்தை சேர் சித்தி விநாயக னுருவைச்
சிந்தையி யினைந்து தியானம் பண்ணி
ஆவா கனமுத லர்க்கிய பாத்தியம்
வாகா ராசா மனம் வரை கொடுத்து
ஐந்தமிர் தத்தா லபிடே கித்துக்
கந்தஞ் சாதிக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திர னென்னுமந் திரத்தான்
மாசக லிரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துமை சுதனாப் புகலுமந் திரத்தாற்
றிருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறு குடனிரு பத்தொரு விதமாப்
பத்திர புட்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிப னுயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்த னீசுர புத்திரன்
ஆகு வாகன ளருடரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி யென்னுநா மங்களால்
ஆரம் பத்துட னர்ச்சனை பண்ணி
மோதக மப்ப முதற் பணி காரந்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீதகன் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பாறயிர் போனகம்
விரும்புள சுவைபொருள் மிகவுமுன் வைத்து
உருத்திரப் பிரிவென் றுரைக்குமந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குப சாரமும்
மற்றவன் றிருவுள மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி யிருபிறப் பாளர்க்
குண்ணறு சுவைசே ரோதன நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க் கீந்திட் டருச்சகன் றனக்குத்
திருத்தகும் விநாயகத் திருவுரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித் திகமென நவிறரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையு முடிப்பர்
திண்ணிய செருவிற் செயமிகப் பெறுவர்
அரனிவன் றன்னைமுன் னர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட வெரித்தான்
உருத்திர னிவனை யுபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை யிவன்றா ளர்ச்சனைபண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ணார் மதிமுகத் தாடம யந்தி
அன்னா ளிவனை யர்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனைய டைந்தாள்
ஐங்கரக் கடவுளை யர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதயை யடைந்தான்
பகீரத னென்னும் பார்த்திவ னிவனை
மகிதலந் தன்னில் மலர் கொடர்ச் சித்து
வரநதி தன்னை வையகத் தழைத்தான்
அட்டதே வதைகளு மர்ச்சித் திவனை
அட்டபோ கத்துட னமிர்தமும் பெற்றார்
உருக்மணி யென்னு மொண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டு போ மளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் றன்னைப்புறங் கண்டு
யாமுமங் கவனை யின்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னி லெண்ணுதற் கரிதால்
அப்படி நீவிரு மவனையர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீ ரப்பொருள் பெறுவீர்
என்றுக றெறிந்தோ னெடுத்திவை யுரைப்ப
அன்றுமுற் றருமனு மனுசரு மிவனைப்
பூசனை புரிந்து ணுகட் புலனிலான் மைந்தரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாசனம் பண்ணி நராதிப ராகிச்
சிந்தையி னினைந்ததை செகத்தினிற் செயங்கொண்
டந்தமில் செல்வத் தரசியில் பெற்றார்
ஈங்கிது நிற்க விவ்விர தத்தியல்
ஓங்கிய காதைமற் றொன்றுரை செய்வாம்
கஞ்சநான் முகன்றருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாண் மாயைதன் வயிற்றிற்
சூரனென் றொருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி யனைத்தையு மழித்தே
சீருடைச் சுவர்க்கத் திரவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்
ஆயிரங் கண்ணனு மமரரு முனிரவும்
நீயிரங் கெமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரியுறை யிறவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைக ளுரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத் தேந்தும்
புதல்வனைத் தருவோம் போமி னீரென
அமரர் கோனுக் கரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடா தூடலும்
ஓடிய வானோ ரொருங்குடன் கூடிப்
பாவகன் றன்னைப் பரிவுட னழைத்துச்
சூரன் செய்யுந் துயர மெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊரர வணிந்தோற் குரையென வுரைப்பக்
காமனை யெரித்த கடவுளென் றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக் கேதவன்
உற்றிடுங் கரதலத் துன்னையே தரித்தான்
நெற்றிய னயனமு நீயெ யாதலிற்
குற்ற மடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் றானுந்
தானுமச் சபையிற் றரியா தேகி
எமையா ளுடைய வுமையா ளுடனே
அமையா வின்பத் தமர்ந்தினி திருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை யவன்கையீ லீதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கவொண் ணாமற்
றரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண் ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ணார் வதனத் தாமரை யாறுங்
கண்ணா றிரண்டுங் கரமீ ராறுந்
தூணெனத் திரண்ட தோளீ ராறும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணயி லாதி வான்படை யுங்கொண்
டறுமுகக் கடவுளங் கவதரித் திடலும்
மறுகிய வும்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பா லளித்திரென் றனுப்ப
ஆங்கவர் முலையுண் டறுமுகன் றானும்
ஓங்கிய வளர்ச்சி யுற்றிடு நாளில்
விமலனு முமையும் விடையுகைத் தாறு
தலைமக னிருந்த சரவணத் தடைந்து
முருகலர் குழலுமை முலைப்பா லூட்ட
இருவரு மின்பா லெடுத்தெடுத் தணைத்துத்
தேவர் தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண் டளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேன் முதற்பல வாயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன் றுதவிப்
பூதப் படைகள் புடைவரப்போய் நீ
ஓதுறு மவுணரை யொறுத்திடென் றனுப்ப
இருளைப் பருகு மிரவியைப் போலத்
தகுவரென் றவரைச் சமரிடை முருக்கிக்
ஞுகுருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற விந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்
டமரர் கோனுக் கமருல களித்துக்
குமரவேளுங் குவலயம் விளங்க
அமரா வதியி லமர்ந்தினி திருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்
டமரர் மாத ரனைவரு மயங்கி
எண்டருங் கற்பினை யிழந்து கண்டே
அண்டரெல்லா மடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்தடி வணங்கி
மருமலர்க் கடம்பனெம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டு நீ யம்பிகா பதியென
இமையவ ருரைப்ப விறையவன் றானுங்
குமரனைக் கோபங் கொண்டு முன் முனியக்
காவல் கொண் டெம்வினை கட்டறுத் தருளுஞ்
சேவலங் கொடியோன் றேசம் போகத்
திருந்திழை யுமையா ளருந்துய ரெய்தி
வருந்தி முன் னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துத லொழிகுதி
அங்கையாற் சூதெறிந் தாடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றர வணிந்த புனிதனைக் காணவங்
குற்றனன் றிருமா லூழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புட னாடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவா யிதழுமை யான்வென் றேனென
எம்பெரு மானும் யான் வென் றேனென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர்க் கொருவ ருத்தரம் பேசி
இருவருஞ் சாட்சி யிவனைக் கேட்ப
மாமனை வதைத்த மான்முக நோக்கிக்
காமனை யெரித்தோன் கட்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றா தென்றுந்
தோற்றா நாயகன் வென்றா னென்றும்
ஒன்றிய பொய்க்கரி ஞு யுடனாங் குரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரியங் குருத்து
நோக்கிநீ யிருந்தும் நுவன்றிலை யுண்மை
வாக்கினி லொன்றாய் மனத்தினி லொன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனநோக்கிப்
பொக்கரி யுரைத்த புன்மையி னாலே
கனலென வயிற்றிற் கடும் பசி கனற்ற
நிலமிசை குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற் றிருக்கும்
வடதரு நிழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள்பூத்த முகினிறத் துருப்போய்த்
துளவணி மருமனுந் துணைவிழி யிழந்தே
ஆண்டரைக் கணத்தில் லாயிரம் யோசனை
நீண்டபைப் பாந்த ணெட்டுட லெடுத்து
வளர்மருப் பொன்றுடை வள்ளல் வீற் றிருக்குங்
கிளர்சினை யாலின் கீழ்க்கிடந் தனலால்
திரிகடக் கரியின் றிருமுகக் கடவுளும்
வழிபடு மடியார்வல்வினை தீர்த்தே
எழில் பெறு வடமரத் தின்கீ ழிருந்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கம்பமா முகத்துக் கடவுடன் பெருமையை
அம்புவி யோருக் கறிவிப் போமென
உம்பரு லகத் தோரெழு கன்னியர்
தம்பநூ லேணியிற் றாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழ தேத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்த பின் னாளில்
ஆர்த்த கலிங்கத் தணியிழை வாங்கி
இருபத்தோரிழை யின்புறக் கட்டி
ஒருபோ துண்டி யுண்டொரு மனமாய்
வேதத் தாதியும் பூமியி லெழுத்தும்
ஆதிவி நாயகற் கான வெழுத்தும்
மூன்றெழுத்து ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்றருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினா றுபசா ரத்தால்
வரைமகண் மதலையை வழிபா டாற்றி
இருபது நாளு இப்படி நோற்று
மற்றை நா ளைங்கர மாமுகன் பிறந்த
தற்றைநாட் சதயமு மாறாம் பக்கமுஞ்
சேருமத் தினத்திற் றெளிபுன லாடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கேற்றிக்
குலவு பொற் கலைகள் கொடுவிதா னித்து
மலர்பல தொடத்திடு மாலைக ணாற்றிக்
கொலைபுரி வடிவேற் குகற்கு முன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சன மாட்டிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்கை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழன் மகிழிரு வாட்சி
தாமரை முல்லை தழையவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்த ளாத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் லெருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடை யறுகு
முத்தலைக் கூவிள முதலிய சாத்தித்
தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்ப மோதக மவள்லெல் ளுருண்டை
மும்பழந் தேங்காய் முதிர்மொழிக் கரும்பு
சீனித்தேன் சக்கரை செவ்விள நீருடன்
பானறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலா திருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறுகொங்கையீர் யானுநோற் பேனென
ஆங்கவன் றனக்கும் வேண்டுவ தளித்துப்
பாங்கொடிவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனா மைங்கர னருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டுவும் பண்டுள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந் துமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சின மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாப நீங்கிய தேனென
மானெடுங் கண்ணி மணிக்கத வடைப்ப
இறையவ னிதற்குக் காரண மேதென
மறிகடற் றுயிலு மாயவ னுரைப்பான்
பிறைமருப் பொன்றுடைப் பிள்ளையன் றெனக்குத்
தந்தருள் புரிந்த தவப்பய னீதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி யடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்கு முன் னுரைத்த சக்கிர பாணி
இக்கதை சொல்ல வக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புட னோற்ற பின்
மாதுமை யடைத்த வன்றாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனு நகைத்தான்
நானோ வந்து நகையா னதுவெனத்
தேனேர் மொழியா டௌியக் கூறென
நன்மதி நுதலாய் நாலிலந் தன்னில்
உன்மக னோன்பி றுனுதி யறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமி லரனை யாயிழை வணங்கிப்
பொருஞ்சூ ரறவேல் போக்கிய குமரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல வேந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் றொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டுழுந் தாமத் தாமனை
மாதுமை யாளை வந்துகண் டனவே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனக்
தண்ணறுங் குழலுமை சாபமிட் டதுவும்
அக்குநீ றணியு மரன்முத லளித்த
விக்கின விநாயகன் விரதநோற் றதன்பின்
சுடர்கதை யேந்துந் துளவ மாலையன்
விடப்பணி யுருவம் விட்டு நீங்கியதும்
பரிவு கொள் கூத்துடைப் பரமனு நோற்றுக்
கவுரியன் றடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவ னவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னி லிவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் னோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையி லுற்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவொடிவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவர லொருத்தி
இற்றிடு மிடையா ளிலக்கண சுந்தரி
மெத்தவன் புடனிவ் விரதநோற் பேனென
அத்தந் தன்னி லணியிழை செறித்துச்
சித்த மகிழ்ந்து சிலநா ணோற்றபின்
உற்ற நோன்பி னுறுதி மறந்து
கட்டிய விழையைக் காரிகை யவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
அங்கது தழைத்தே யலருந் தளிருமாய்ப்
பாங்குற வோங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போச்சிறை யிருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்விய மில்லா ளவ்விடந் தன்னிற்
கொவ்வை யடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டவ ளெடுத்துக்
குழைதவழ் விரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோ டடைக்கா யவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத் தண்ணல் கருணை கூர்ந்து
பண்டையி லிரட்டி பதமவட் கருளக்
கொண்டுபோ யரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உக்கிர மான வுடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளின்றாலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக்கலங்கி மன்னவன் றன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி யிம்மனை யிருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென வெழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ண லுரைத்திடு மவ்வழி தன்னில்
ஆனை குதிரை யவைபல முடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழு திவளிங் கிருக்கலா காதென
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்
வணிகன் றனது மனைபுகுந் திருப்ப
மணியு முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை யவனு மகற்ற
உழவர் தம் மனையி லுற்றவ ளிருப்ப
வளர்பயி ரழிந்து வளம்பல குன்ற
அயன்மனை யவரு மகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கல முடைந்து கொள்ளை போக
அயற்கடை யவனு மகற்றிய பின்னர்த்
தூசுதூய் தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுக லெல்லாம் துணிந்துவே றாகத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூசரு மவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வள்மனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞால மெல்லா நடுங்கவந் துதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யா ரென்ன
வெம்மன மிகவு மேவி முனிவுறா
அம்மனை யவனு மகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்ல அகங்க டோறும்
வைதன ரெறிந்தனர் மறியத் தள்ளினர்
கையொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் னகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண் டுலகு கருணையோ டாண்ட
மார்த்தாண்ட ராசன் மாமக ளொருத்தி
எல்லார்க்கு மூத்தா ளிலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட விருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலமெழு கிடுகெனச்
சாணி யெடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியு முழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி யெடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணு மண்ணிய வீட்டின் மணிவிளக் கேற்றிப்
புத்தகமெடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின் றாட
மெத்தவுண் ணடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே யகமதிற் சென்று
புத்தக மெடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளை செய் காரிய மிதுவென
உத்தமி யவ்வை யுணர்ந்து முன் னறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்
கரத்துமூ வேழிழைக் காப்புக் கட்டி
அப்பமு மவலு மாப்பல பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்கிழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற் றதற்பின்
சக்கிர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோ மெனவுள மெலிந்தே
அவ்வை தன்மனை யங்கவ ரணுக
எய்துந் தாகமு மிளைப்புங் கண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வே யவற்றைத் தீர்க்க வெண்ணி
இலக்கண சுந்தரி யென்பவ டன்னை
அப்பமு நீரு மரசற் கருளெனச்
செப்பிய வன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமு மொருபணி காரமும்
பண்ணேர் மொழியாள் பார்த்திபற் குதவ
ஒப்பறு படையு முயர்படை வேந்தனும்
அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை யவைகளு முண்டுத்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென் றரசர்க் குரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காணிது
குணமுடை யிவளுன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி யென்றவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து
திங்கணேர் வெள்ளிச் சிவிகையி னேற்றிக்
கொண்டூர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரி லுயர்பத முதவினன்
சிந்துர நுதலார் சென்றடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோ டெப்பொருளும்
மன்னு நவமணியும் வந்தணுகும் - உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக வுத்தமனார் நோன்பின்
றிருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கட் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தி னோன்பின் கதைதன்னைச் - சாற்பெருகக்
கற்றவரு நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவார் கற்பகத்தின் பேறு.

வெள்ளை யெருதேறும் விரிசடையோன் பெற்றெடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதைரய- உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வர் நோலா தருகிருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலார் நோக்கிற் சுதரை மிகப் பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தானோற்கில் - மேலைப்
பிறப்பெல்லா நல்ல பெருஞ்செல்வ மெய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

பிள்ளையார் கதை முற்றுப் பெறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போற்றித் திருவகவல்

அருள்புரிந் தருளு மரசே போற்றி
இருவினை துடைக்கு மிறைவா போற்றி
மறைமுனி யொருவன் மாங்கனி கொணர்ந்து
கடைமிடற் றிறைவன் கையில் கொடுப்ப
வேலனு நீயும் விரும்பிமுன் னிற்ப
ஒருநொடி யதனி லுலகெலாம் வலமாய்
வருமவர் தமக்கு வழங்குவோம் யாமென
விரைவுடன் மயின்மிசை வேலோன் வருமுனர்
அரனை வலம்வந் தக்கனி வாங்கிய
விரகுள விக்கின விநாயக போற்றி
முன்னடி தெரியா முதல்வனைப் போற்றிப்
பின்னடி தெரியாப் பெருங்கவிப் பெருமான்
மண்மிசை வைத்துனை வாவியிற் செல்லக்
கண்ணிலா னிவனெனக் கரந்தவன் போகக்
கரமிசை யேறிக் காணா திரங்கி
உரைதடு மாறி யுள்ளங் கலங்கிக்
கூகூ கணபதி கூகூ வென்னக்
கூகூ வென்றருள் குன்றே போற்றி
அப்பணி சடையோன் முப்புர மெரிக்க
இப்புவி யதனை யிரத மாக்கித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தினகரன் மதிதேர்ச் சில்லி யாகப்
பொருவரு மறைகளே புரவி யாகச்
சங்கைசேர் நான்முகன் சாரதி யாகப்
பங்கயக் கண்ணன் பகழி யாக
மலைசிலை யாக வாசுகி நாணா
நிலைபெற நிற்கு நெடுந்தேர் தன்னில்
விக்கினந் தீர்க்கும் விநாயக நமவெனச்
சிக்கென விறைவன் செப்பா தேறலின்
தச்சுறச் சமைத்த தகைமணி நெடுந்தேர்
அச்சறுத் தருளு மரசே போற்றி
வேதப் பொருளாம் விமலா போற்றி
பூதப் படையுடைப் புனிதா போற்றி
கரமைந் துடைய களிறே போற்றி
பரமன் பயந்த பாலா போற்றி
அகில மீன்றரு ளம்மை தனக்குத்
திருமக னாகிய செல்வா போற்றி
அற்றவர்க் கருள்புரி யரசே போற்றி
கற்றவர் மனத்திற் காண்பாய் போற்றி
பாசாங் குசங்கை பரித்தாய் போற்றி
தேசார் மணிமுடித் தேவே போற்றி
எழுநர கெழுபிறப் பறுப்பாய் போற்றி
எழுமையு மெமக்கிங் கிரங்குவாய் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துளைசெறி வக்கிர துண்டா போற்றி
வளநிக ரொற்றை மருப்பா போற்றி
வரமிகு மரிதிரு மருகா போற்றி
சுரர்தொழு முருகன் துணைவா போற்றி
நல்லவர் புகழு நம்பா போற்றி
வல்லபைக் குரிய மணாளா போற்றி
கயமுகத் தவுணனைக் காய்ந்தாய் போற்றி
வயமிகு மூஷிக வாகனா போற்றி
ஓங்கா ரத்தனி யுருவே போற்றி
நீங்காக் கருணை நிமலா போற்றி
துறவர் தமக்கொரு துணைவா போற்றி
முறநிகர் தழைசெவி முதல்வா போற்றி
துண்டமா மதிபோற் றுலங் கிய கோட்டைக்
கண்டக மாகக் கைதனிற் பிடித்துப்
பண்டு பாரதப் பழங்கதை பசும்பொன்
விண்டுவில் வரைந்த விமலா போற்றி
போற்றி போற்றியுன் பொற்பதம் போற்றி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடைக் கடவுளர்க் கதிபதி செயசெய
ஆபத் தகற்று மைங்கர செயசெய
இந்துச் சடைமுடி யிறைவா செயசெய
ஈசன் பெற்ற எம்மான் செயசெய
உன்னிய முடிக்கு யொருவா செயசெய
ஊர்மனை சந்தி யுகந்தாய் செயசெய
எம்பெரு மானே யேகனே செயசெய
ஏழுல குந்தொழ விருப்பாய் செயசெய
ஐயா கணங்கட் காதீ செயசெய
ஒற்றை மருப்பை யுடையாய் செயசெய
ஓங்கிய கரிமுக முற்றாய் செயசெய
ஔவிய மில்லா தவனே செயசெய
அ.ஃகர வணிந்த வாதீ செயசெய
கண்மூன் றுடைய களிறே செயசெய
ஙப்போன் மழுவொன் றேந்தீ செயசெய
சாங்கரன் றேரச் சறுத்தாய் செயசெய
ஞயமுடை வித்தக நம்பீ செயசெய
இ. டமுடை விக்கி னேசுரா செயசெய
இ. ணங்கிய வன்பர்க் கினியாய் செயசெய
தத்துவ முறைதரு சாமீ செயசெய
நன்நெறி வித்தக நம்பீ செயசெய
பகீரதிக் கினிய பாலா செயசெய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ, யக்கரைக் களையு மிறைவா செயசெய
அ, ரவக் கிங்கிணி யணிவாய் செயசெய
இ, லகக் கொம்பொன் றேந்தீ செயசெய
வஞ்சனைப் பழவினை மாற்றுவாய் செயசெய
அ, ழகிய வேலனுக் கண்ணா செயசெய
இ, ளமத யானை முகத்தாய் செயசெய
இ, றக்கரிணு சாடு மிறைவா செயசெய
அ, னந்த லாடு மரசே செயசெய
கரமைந் துடைய கணபதி செயசெய
காமன் பகைவன் காதல செயசெய
கிரியிற் பாரதந் தீட்டினாய் செயசெய
கீழ்மை யொழித்துக் கிளர்வாய் செயசெய
குண்டப் பண்டிக் குருவே செயசெய
கூறிய மும்மதக் கோவே செயசெய
கெண்டையங் கண்ணுமை மகனே செயசெய
கேதா ரப்ரிய மானாய் செயசெய
கையிற் சக்கர முடையாய் செயசெய
கொவ்வைக் கனிவாய் மதலாய் செயசெய
கோலக் குடநிகர் வயிற்றாய் செயசெய
கௌவைப் பழவினை தீர்ப்பாய் செயசெய.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தாமரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன்னரை ஞாணும்பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்தழகு எறிப்பப்
பேழை வயிறும் பெரும் பாரக் கோடும்
வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குசபாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூக்ஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள்ள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்துத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்திய முதலைந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணை இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்கும் தந்தெனக்குஅருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறாதாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி அதனில் கூடிய அசபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன்இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற் சக்கரத்தின் உறுப்பையுங் காட்டி
சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
எண்முக மாக இனி தெனக்கு அருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்து
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே எந்தன் சிந்தை தெளிவித்து
இருள் வெளி இரண்டிற்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி யென் செவியில்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்

சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி

அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி

வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்

கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை

நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்

தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்ட

வித்தக விநாயக விரைகழல் சரணே.

இந்த அகவலைப்பாடி விநாயகரைப் பூசித்த ஔவையாரை கைலாயத்தில் ஆதியுலா அரங்கேற்றத்துக்கு விநாயகர் தன் துதிக்கையால் எடுத்துச் சென்று சேரமான் பெருமாள் நாயனார் அங்கு செல்லுமுன்னரே சேர்ப்பித்தார். எனவே இந்த அகவலைப் பாடுபவர் எடுத்த காரியத்தை மிகவிரை விலேயே நிறைவேற்றுவர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயக கவசம்

ஆதியில் இக்கவசத்தைக் காசிமுனிவர் முற்கல முனிவருக்கு அருளிச் செய்ய, அவர் மாண்டவிய முனிவருக்கு அநுக்கிரகிக்க அவர் மாரீசி முனிவருக்கு உபதேசித்தருள, அவர் பல முனிவர் களுக்குத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தன ரென்றறிய.

நித்திய கருமங்களை முடித்துப் பரிசுத்த மாகிய ஓரிடத்தில் இருந்து கொண்டு, ஒன்றுபட்ட மனத்துடனே விநாயகரை தியானித்து, இதைச் செபிக்கவேண்டும்.

வளர்சிகையைப் பராபரமாய் வயங்குவிநா
யகர்காக்க வாய்ந்த சென்னி
யளவுபாட வதிகசவுந் தரதேக
மதோற்கடர்தா மமர்ந்து காக்க
விளரறநெற் றியையென்றும் விளங்கியகா
சிபர்காக்கப் புருவந் தம்மைத்
தளர்வின்மகோ தரர்காக்க தடவிழிகள்
பாலசந் திரனார் காக்க. (1)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவின்வளரு மதரங்கச முகர்காக்க

தாலங்கணக் கிரீடர் காக்க

நவில்சிபுகங் கிரிசைசுதர் காக்கநனி

வாக்கைவிநா யகர்தாங் காக்க

அவிர்நகைதுன் முகர்காக்க வள்ளெழிற்செஞ்

செவிபாச பாணி காக்க

தவிர்தலுறா திளங்கொடிபோல் வளர்மணிநா

சியைச்சிந்தி தார்த்தர் காக்க (2)

காமருபூ முகந்தன்னைக் குணேசர்நனி

காக்களங் கணேசர் காக்க

வாமமுறு மிருதோளும் வயங்குகந்த

பூர்வசர்தா மகிழ்ந்து காக்க

ஏமமுற மணிமுலைவிக் கினவினா

சன்காக்க விதயந் தன்னைத்

தோமகலுங் கணநாதர் காக்கவகட்

டினைத்துலங்கே ரம்பர் காக்க. (3)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கமிரண் டையுந்தரா தரர்காக்க
பிருட்டத்தைப் பாவ நீக்கும்
விக்கினக ரன்காக்க விளங்கிலிங்கம்
வியாளபூ டணர்தாங் காக்க
தக்ககுய்யந் தன்னைவக் கிரதுண்டர்
காக்கசக னத்தை யல்லல்
உக்ககண பன்காக்க வூருமைமாங்
களமூர்த்தி யுவந்து காக்க. (4)

தாழ்முழந்தாண் மகாபுத்தி காக்கவிரு
பதமேக தந்தர் காக்க
வாழ்கரங்கிப் பிரப்பிரசா தனர்காக்க
முன்கையை வணங்கு வார்நோய்
ஆழ்தரச்செய் யாசாபூ ரகர்காக்க
விரல்பத்தும் வர்த்தர் காக்க
கேழ்கிளரு நகங்கள்விநா யகர்காக்க
கிழ்க்கினிற்புத் தீசர் காக்க. (5)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கினியிற் சீத்தீசர் காக்கவும்
புத்திரர்தென் னாசை காக்க
மிக்கநிரு தியிற்கணே சுரர்காக்க
விக்கினவர்த் தனமேற் கென்னுந்
திங்கதனிற் காக்கவா யுவிற்கசகன்
ன்னன்காக்க திகமு தீசி
தக்கநிதி பன்காக்க வடகிழக்கி
லீசநந் தன்ரே காக்க (6)

ஏகதந்தர் பகன்முழுதுங் காக்கவிர
வினுஞ்சந்தி யிரண்டவன் மாட்டும்
ஓகையின்விக் கினகிருது காக்கவிராக்
கதர்பூத முறுவே தாள
மோகினிபே யிவையாதி யுயிர்த்திறத்தால்
வருத்துயரு முடிவி லாத
வேகமுறு பிணிபலவும் விலக் குபுபா
சாங்குசர்தாம் விரைந்து காக்க (7)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிஞானந் தவந்தான மானமொளி
புகழ்குலம்வண் சரீர முற்றும்
பதிவான தனந்தானி யங்கிரக
மனைவிமைந்தர் பயினட் பாதிக்
கதியாவுங் கலந்துசர்வா யுதர்காக்க
காமர்பவுத் திரர்முன் னான
விதியாருஞ் சுற்றமெல்லா மயூரேச
ரெஞ்ஞான்றும் விரும்பிக் காக்க (8)

வென்றிசீ விதங்கபிலர் காக்கரி
யாதியெலாம் விகடர் காக்க
என்றிவ்வா றிதுதனைமுக் காலமுமோ
திடினும்பா லிடையூ றொன்றும்
ஒன்றுறா முனிவரர்கா ளறிமின்கள்
யாரொருவ ரோதி னாலு
மன்றவாங் கவர்தேகம் பிணியறவச்
சிரதேக மாகி மன்னும். (9)

விநாயகர் கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்தியுனே இந்தக் கவசத்தைப் பாராயணஞ் செய்பவர்களுக்குப் பிணியும், வறுமையும், பேய் பூதங்களாலுண்டாகின்ற பல துன்பங்களும், கவலை களும், பாவமுதலியவைகளும் தீங்கும் அன்றியும், பெருஞ் செல்வமும், தீர்க்காயுளும், களத்திர புத்திர மித்திராதிகளும் உண்டாகும். அன்றியும், யாத்திரையிலே இதைச் செபித்தால் சகல விக்கினமும் போய்ப் பயன்களெல்லாம் கைகூடும். யுத்தத்திலே இதைச் சொன்னால் சயமுண்டாகும். இருபத்தொருநாள் நாளொன்றுக்கு ஏழுமுறை தோத் திரஞ் செய்தால், மாரண நீங்குவதன்றி உச்சாடனம் ஆகருஷ்ணம், ஸ்தம்பன முதலிய வைகள் பயனுறும், இருபத்தொருநாள் நித்தியம் இருபத் தொருதரஞ் செபித்தால் சிறையிருப்பு விடுதலாவது மன்றி, அரசர்களுடைய நிஷ்டூரமும் நீங்கும்.

அரசனைக் காணப்போகும்போது பக்தியினால் மூன்றுதரம் இதை ஓதினால் அவன் வசப்படுவான். இதைப் படித்தாலும் ஒருவர் சொல்லக் கேட்டாலும் பூசித்தாலும், எப்படிப்பட்ட துன்பமும் நீங்கும்.

திருச்சிற்றம்பலம்

திருவுங் கல்வியுஞ் சீருந் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவ மாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மாழத்துப் பிள்ளையைப் பேணுவாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



# சிவபுராணம்

தொல்லை யிலும்பிறவி சூழுந்தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே -எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சி வாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உண்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணந்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்விளங்கொளியாய்
எண்ணிறந்து எல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விரும மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்லா அநின்றவித்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தோனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட முடிய மாய இருளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழு அழுக்கு மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தம் கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேர் ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேஓ என்று என்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓஎன்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர் கணபதிப்பிள்ளை விநாயகமூர்த்தி

(இளைப்பாறிய ஆசிரியர்)

மலர்வு 30-06-1938 உதிர்வு 12-03-2017



அமரர் விநாயகமூர்த்தி இராசம்மா

(இளைப்பாறிய ஆசிரியை)

மலர்வு 02-07-1938 உதிர்வு 09-01-1992

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
அம்மன் துணை



# கௌரிகாப்பு

## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின் றருள்செய் எலிவா கனப்பிள்ளையாய்
சொற்குற்ற மொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரியம்மாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணும் உணவாக உயிரினுக் குயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்துவந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தர முகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளித்தாயே
கொடிய மகிஷாசுரனைக் கூறுபோட்டவளே
அசுரக் குணம்யாவும் அழிக்கும் சுடர்க்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மாநீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரிநீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்றுநீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமையணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத்திகைப்போர்க்கு நெறிமுறையைக்காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காளிமகா தேவியரே காப்பருளும் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கு அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான்விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்குக் கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தி தாயவளே
ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால்பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளிமகா தேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசினியில் வேற்றுமையைக் கணப்பொழுதே மாற்றிவிட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்துபுகழ் தேவியரே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் பெருகிவரும்
நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரியம்மா
காப்புக் கட்டிவிட்டு கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற் கனன்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே
காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை

இருபது நாள்வரையில் இசைவோடு விரதமிருந்து

பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு

சித்தியெல் லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு

எச்சகத்திலோர்களெல்லாம் ஏற்றிஎமைப் போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்

கௌரிக் காப்பதனை காலம் தவறாமல்

முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர

ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர

தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே

காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ
சிவமயம்

# திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னேயென்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசி இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்க்கள் ஏத்துதற்குக்
கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பர்யாம் ஆரேலோ ரெம்பாவாய். 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன் ஆனந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோ ரெம்பாவாய். 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உள்நெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயிலேலோ ரெம்பாவாய். 4


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாலறியா நான்முகனுங் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோ ரெம்பாவாய். 5

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும் எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோ ரெம்பாவாய். 6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்

உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்

என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமுஞ்

சொன்னோங்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ

வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்

என்னே துயிலின் பரிசேலோ ரெம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்

ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்

கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ

வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்

ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ

ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை

ஏழைபங் காளனையே பாடலோ ரெம்பாவாய். 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார்தாள்பணிவோம்ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எனக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோ ரெம்பாவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயில் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோ ரெம்பாவாய். 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
செய்யாவெண் ணீறாடிச் செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
காப்பாற் எமையேலோ ரெம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச் சிற்றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லாமும்
காத்தும் படைத்துங் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோ ரெம்பாவாய். 12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம் மாபாடிப்
பேதித்து நம்மை வளர்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோ ரெம்பாவாய். 14



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால்வந்தனையாள்விண்ணோரைத்தான்பணியாள்
போரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 15

முன்னிக் கடலைச் சுருக்கியெழுந் துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோ ரெம்பாவாய். 16



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாயந் தாடேலோ ரெம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடிவின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணா ஒளிமழுங்கித் தாரகைகள் தாம் அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந் தாடேலோ ரெம்பாவாய். 18



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழங்சொற் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை எனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கல்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோரெம்பாவாய்.20

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்குந் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோ ரெம்பாவாய். 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

முருகன்துணை



# கந்த சஷ்டி கவசம்

## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சில்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிக்ஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர்
சக்ஷ்டி கவசந் தனை.

### குறள் வெண்பா

அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செய்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாட கிண்கிணி யாட
மைய நடஞ்செய்யும் மயில் வாகனனார்
கையில்வே ல்எனைக் காக்கவென்று வந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் நீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலங்குகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ சணமும் பதக்கமுந் தரித்து
நண்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செப்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்றிரு வடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுயிர் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டு கண்ணினைக் காக்க
விதிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல்முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருடன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீங்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக்க தாக்க தடையறத்தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்ல பூதம் வலாகஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக்கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லினு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனை வரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளங்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமு மயிரும் நீண்முடி மண்டையும்
பாவை களுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டியச் செருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசும் பணமும் காவுடன் சோறும்

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்

அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட

மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட

காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட

அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட

வாய்விட டலறி மதிகெட் டோட

படியினில் முட்டப் பாசக் கயிற்றால்

கட்டுட னங்கம் கதறிடக் கட்டு

கட்டி யுருட்டு கால்கை முறிய

கட்டு கட்டு கதறிடக் கட்டு

முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட

செக்கு செக்கு செதிற் செதிலாக

சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொங்கு

குத்து குத்து கூர்வடி வேலால்

பற்று பற்று பகலவன் தணலொரி

தணலெரி தணலெரி தணலது வாக

விடுவிடு வேலை வெருண்டதுவோட

புலியும் நரியும் புன்னரி நாயும்

எலியுங் கரடியும் இனித்தொடர்ந்தோடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேளும் பாம்பும் செய்யான் பூரான்

கடிவிட விக்ஷங்கள் கடித்துய ரங்கம்

ஏறிய விக்ஷங்கள் எளிதுடன் இறங்க

ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்

வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்

சூலைசயங் குன்மம் சொக்குச் சிரங்கு

குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி

பக்கப் பிளவை படர்தொடை வாழை

கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி

பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்

நில்லா தோட நீயெனக் கருள்வாய்

ஈரே ழுலகமும் எனக்குற வாக

ஆணும் பெண்ணும் அனைவரு மெனக்கா

மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்

உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்

சரவண பவனே சையொளி பவனே

திரிபுர பவனே திகழொளி பவனே

பரிபுர பவனே பவமொழி பவனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமார
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப்பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் இரட்சி அன்னமும் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக் குறமகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கவென் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவநீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திடவருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்க தருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறித்தென துள்ளம் அஷ்டலட்சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துணை வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயினட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணம் சண்முகா சரணம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# சகலகலாவல்லி மாலை

வெண்டா மரைக்கன்றி நின்பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாதுகொலோ
சக மேழுமளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்தாக
வுண் டாக்கும்வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே. 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்வாய்
பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்குங் கரும்பே
சகல கலாவல்லியே. 2



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
சகல கலாவல்லியே. 3

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியும் சொற்சுவைதோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமும்
தொண்டர்செந் நாவினின்று
காக்குங் கருணைக் கடலே
சகல கலாவல்லியே. 4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பஞ்சப்பி தந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்னே
நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகல கலாவல்லியே. 5

பண்ணும் பரதமுங் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்தநல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணுங் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே. 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்கா
யுளங் கொண்டுதொண்டர்
தீட்டுங் கலைத்தமிழ் தீம்பா
லமுதந் தெளிக்கும்வண்ணம்
காட்டும்வெள் ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே. 7

சொல்விற் பனமு மவதானமுங்
கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதன் றொருகால
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே
சகல கலாவல்லியே 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்யார்
நிலந் தோய்ப்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே
சகல கலாவல்லியே. 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண் டளவிற் பணியச்செய்வாய்
படைப் போன்முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்டேனும்
விளம்பிலுன்போல்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலாவல்லியே. 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# ஸ்ரீ கண்ணன் கவசம்

அகரம் முதலே அழியாப் பொருளே
ஆயர் குலமே நேயர் கரமே
இகமும் பரமும் இணையும் இடமே
ஈதல் மரபாம் இதயத் தவமே
உலகக் குடையே வேதப் பொருளே
ஊதும் குழலுள் வேதப் பொருளே
எரியும் கனலில் தெரியும் புனலே
ஏழை மனதில் வாழும் அருளே
ஐயம் தீர்க்கும் அறிவுக் கதிரே
ஐவர் துணையே அன்புச் சிலையே
ஒளியே விழியே உயிரே வழியே
ஓடும் நதியில் பாடும் அலையே
அவ்வவ்வுலகை ஆக்கும் நிலையே
அடியேன் சரணம் சரணம் சரணம்
அறமே அறமே அறமே அறமே
திறமே திறமே திறமே திறமே
தவமே தவமே தவமே தவமே
வரமே வரமே வரமே வரமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேதம் விளையும் வித்தே விளைவே
நாதம் பொழியும் நலமே நிலமே
ஓதும் பொழுதே உடனே வருவாய்
உள்ளம் கேட்கும் வெள்ளம் தருவாய்
அறியாக் கவலை அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொய்யாமொழியே பொங்கும் நிலவே
பூமிக் குடையின் காவற் பொருளே
பார்த்தன் பணியும் பாதம் காக்க
பாஞ்ச சன்னியம் பக்தனைக்காக்க
மூடர்கள் தமையன் மோகனன் காக்க
முள்ளில் மலராய் முனைத்தோன் காண்ண
வாடும் உயிரை மன்னவன் காக்க
தேடும் விழியைத் திருமால் காக்க
கேலிப்பொருளைக் கிருஷ்ணன் காக்க
கண்ணீர் நதியை கண்ணன் காக்க
துன்பம் என்றோரு சுமையைத் தீர்க்க
தூயோன் வருக துணையே தருக
மாதர் கற்பும் மடவார் நோன்பும்
மாயோன் காக்க மலைபோல் வருக
தகிடத் தகிடத் தகிடத் தகவென
தறிபடு துன்பம் தறிகெட ஓட
தகிடத் திகிடத் திகிடத் திகிடத்
திசைவரு கவலை பசை இல தாக
துருவத் துருவத் துருவத் துருவிடத்
தொலையாய் பொருளே அலையாய் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிஷ்கா மத்தில் நிறைவோன் வருக
காமசந் யாசக் களமே வருக
ஞானம் யோகம் நல்குவன் வருக
நல்லோர் வாழ்வில் நலமே நிறைக
அடியேன் துயரம் அதிகம் அதிகம்
அருள்வாய் அருள்வாய் கவசம் கவசம்
பொங்கும் வேலும் புண்ணாக் காது
பொருந்தும் துயரம் பொடிபடு மாறு
தாங்கும் தலைவன் தாமரைக் கண்ணன்
தாளில் வீழந்தேன் சரணம் சரணம்
மதுசூ தனனே மனிதன் சரணம்
இருடீ கேச இயலான் சரணம்
கீதாச்சாரிய கிருஷ்ணா சரணம்
வேதாச்சாரிய வேந்தே சரணம்
தேவகி மைந்தா சிறியேன் சரணம்
யசோத குமார அடியேன் சரணம்
உன்னை விட்டொரு உறவுகளில்லை
என்னை விட்டொரு இனியவ னில்லை
நம்மை விட்டொரு நண்பர்க ளில்லை
எங்கெங் கேநான் இருந்திடும் போதும்
அங்கங்கே நீ அருள்செய வருக
கோசலை ஈன்ற குமரா வருக
கோதையின் மாலை கொண்டவன் வருக
ரகுவம் சத்தின் நாயகன் வருக
யதுவம் சத்தின் யாதவன் வருக
மதுவை வென்ற மாதவன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைக்குடி கொண்ட மாயவன் வருக
திருப்பதி யாளும் திருமால் வருக
திருவரங் கத்துப் பெருமான் வருக
இராவணன் கொடுமை தீர்த்தாய் துன்பம்
இரா" வணம் எமக்கும் இன்னருள் புரிக
கம்சன் கொடுமை களைந்தோய் வருக
காலனை வெல்லக் கைவலி தருக
நெற்றியில் திருமண நெஞ்சில் வைரம்
காதில் குண்டலம் கையில் வில்லொடு
தண்டைக் காலில் சலங்கை குலுங்க
அண்டையில் வந்து அருளே புரிக
கௌரவம் காக்கக் கண்ணா வருக
பார்த்தன் மகிழப் பாடம் சொன்னாய்
படித்தவன் மகிழப் பரமே வருக
மூன்று குணங்கள் முறையாய்க் கூறிய
சான்றோன் பாதம் தாவி யணைத்தேன்
சிக்கென உன்னைச் சேர்த்துப் பிடித்தேன்
பக்கென உந்தன் பாதம் பற்றினேன்
கொக்கென நின்று குறிவைத் திருந்தேன்
அக்கணம் வந்தாய் அடியில் விழுந்தேன்
இக்கணம் என்னை ஏங்க விடாமல்
தக்கவ னேநீ தயவுடன் அருள்க
கல்லாய்ப் போனவன் காலடி பட்டு
பெண்ணாய் ஆனது பிழையே அன்று
உன்னால் தானே உலகம் இயக்கம்
கண்ணனி லாமல் கடல்வான் ஏது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணனி லாமல் கடவுளு மில்லை
கண்ணனி லாமல் கவிதையு மில்லை
கண்ணினி லாவிடில் காற்றே இல்லை
எத்தனை பிறவி எத்தனை பிறவி
அத்தனை பிறவியும் அடியேன் கொண்டால்
சத்திய நாதன் தாள்களை மறவேன்
தத்துவத் கண்ணன் தனிமுகம் மறவேன்
உன்னை நம்பி உனையே சேர்ந்தால்
பிறவிக ளிலைநீ பேசிய பேச்சு
உலகில் போதும் ஒருமுறை மூச்சு
உன்னிடம் சேர்த்து உன்வடி வாக்கு
இங்கே நாங்கள் இருக்கும் வரையில்
சங்கு முழங்கு தர்மம் நிலைக்க
பிள்ளைகள் வாழ்க்கை பிழையா காமல்
மனையவன் வாழ்க்கை மாண்பு கெடாமல்
இல்லை என்றொரு நாளில் லாமல்
தொல்லை என்பது துளியு மிலாமல்
தொற்றும் நோய்கள் பற்றிவிடாமல்
முதுமை துயரம் மூண்டு விடாமல்
படுக்கையில் விழுந்து பரிதவிக்காமல்
சிந்தனை கெட்டுத் திறமையும் கெட்டு
நிந்தனை பெற்று நீங்கி விடாமல்
என்றும் பதினா றின்மை வழங்கு
இப்பணிதொடர் அற்புதம் காட்டு
தளரா மேனியில் சக்தியை கூட்டு
தாய்போ லிருந்து சாதம் ஊட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்தால் இப்படி வாழ்வது நன்றென
ஊரார்க் கென்னை உதாரணம் காட்டு
உலகில் ஒருவன் உத்தமன் இவனென
உயிர்கள் பேசிடும் ஒருநிலை கூட்டு
சிறியவர் பெரியவர் வறியவர் செல்வர்
சரிசரி சரியெனத் தலையை யசைக்க
பொலிபொலி பொலழயெனப் புகழும் விளங்க
மளமள மளவென மனையிருள் நீங்க
கலகல கல கலவென காசுகள் சேர
தளதள தளவெளத் தர்மம் தழைக்க
வரவர வரவர வாய்ப்புக்கள் வாய்க்க
ரகுபதி பசுபதி நன்மைகள் அருள்க
ஐயா சரணம் சரணம் சரணம்
அடியேன் வாழ்வில் நீயே கவசம்
கவசம் கவசம் கவசம் சவசம்
வந்தது வாழ்வில் மன்னவன் கவசம்
கவசம் கவசம் கவசம் கவசம்
வாழ்க்கை என்னும் கோபுரக் கவசம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனே துணையென அறிவோம் அறிவோம்
அரிஓம் அரிஓம் அரிஓம் அரிஓம்
அவனிடம் எதையும் தருவோம் தருவோம்
ஜெயஜெய ராமா ஜெயஜெய கிருஷ்ணா
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய

(வட்டக்கச்சி கண்ணபிரானுக்குச் சமர்ப்பணம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எமது அன்புத் தந்தையார் இறைவனடி
சேர்ந்த பொழுது உடனிருந்து எமக்கு
உதவியவர்களுக்கும், மரணச்செய்தி கேட்டு
உள்நாடு, வெளிநாடுகளிலிருந்து
தொலைபேசி மூலமும், தொடர்பு
கொண்டவர்களுக்கும் துயரில் கலந்து
கொண்டோர்க்கும், கண்ணீர்அஞ்சலி பிரசுரம்
வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையம்
சாத்தியோருக்கும், இறுதி கிரியைகளில்
கலந்து கொண்டவர்களுக்கும்,
இன்று நடைபெறும் அந்தியேட்டி கிரியையிலும்,
மற்றும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும்
கலந்து கொண்டோருக்கும் , இம்மலரினை
அழகுற அச்சிட்டுத் தந்த அச்சுவேலி
தர்சா தமிழ்ப் பதிப்பகத்தினருக்கும்
எமது உளமார்ந்த நன்றிகளைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.



பிரதான வீதி,
அச்சுவேலி தெற்கு,
அச்சுவேலி.

இங்ஙனம்
குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சா

கணபதிப்பிள்ளை☆ + சின்னம்மா☆

- விநாயகமூர்த்தி
- சுப்பிரமணியம்
- இராசலக்ஷ்மி
- தெய்வேந்திரம்
- செல்

விநாயகமூர்த்தி

- செல்வரதி + தங்கவடிவேல்
  - ராகவன்
  - துவாரகா
  - றமணன்
  - துளசிகா
- ஸ்ரீரதி + பிறேமகுமார்
- பகீரதி + கருணாநந்த
  - யசோபிகா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாவழி

வைரமுத்து☆ + முத்துப்பிள்ளை☆

- செல்வத்துரை☆
- பொன்னுத்துரை☆
- இராசம்மா☆ (செல்லக்கண்டு)
    - பகீரதி + ணாநந்தன்☆
        - யசோபிகா
    - ஐங்கரன் + தக்ஷ்ணி
- கந்தசாமி
- சிவசுப்பிரமணியம்☆


☆ இக்குறியீடு அமரர்களைக் குறிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org